2015 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

152—

நூலகக் கட்டடம்

***41725—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சி நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

சதிகளைச் சந்தியிலே நிறுத்தி, தடைகளைத் தவிடுபொடியாக்கி, துரோகங்களைத் தூள் தூளாக்கி, தமிழகத்தைத் தனிப்பெரும் சக்தியாக தலைமையேற்று வழி நடத்தி வரும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-10

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சியில் செயல்படும் கிளை நூலகம் 5-1-2014 வரை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. மன்னார்குடியில் செயல்பட்டு வரும் சமரச ஞானசபை இந்நூலகத்திற்கு 12,284 சதுர அடி நிலத்தினைத் தானமாக வழங்கியுள்ளது. தானமாக வழங்கப்பட்ட நிலத்தில் 2,014 சதுர அடி பரப்பளவில் நல்ல நிலையில் உள்ள கட்டடத்திற்கு 6-1-2014 அன்று கிளை நூலகம் மாற்றப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. பொது நூலகத் துறையின்கீழ் செயல்படும் நூலகங்களுக்கு தற்போதுள்ள சூழலுக்கேற்றவாறு நவீன வசதிகளுடன் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மன்னார்குடி நகராட்சியில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, 8,360 சதுர அடி காலி மனை வருவாய்த் துறையால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டடம் கட்ட திருத்திய வரைபடத்திற்கான ஒப்புதல் பொதுப் பணித் துறையிடமிருந்து பெறப்பட்டுள்ளது. நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ்பெற்ற மன்னார்குடி நகரத்தில், பல ஆண்டுகளாக நூலகம் ஒன்று வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. 2010-2011 ஆம் ஆண்டு நகராட்சிக் கூட்டத்தில் மன்னார்குடி நூலகத்திற்காக நிலம் ஒதுக்கப்பட்டது. செப்டம்பர் 5, 2011 அன்று இந்த மாமன்றத்தில் நான் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு அன்றைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்த திரு. சி.வி. சண்முகம் அவர்கள், இந்த நிலம் மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டவுடன், கட்டடம் கட்டப்படுமென்று பதிலளித்தார். மீண்டும் 31-10-2013 அன்று இதுகுறித்து நான் எழுத்துமூலம் அளித்த ஒரு கேள்வி அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்றுவரை அங்கே கட்டடம் கட்டப்படவில்லை. 28-1-2014 அன்று ஓர் அறக்கட்டளை மூலமாக இந்நூலகத்திற்கு ஒரு கட்டடம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் புதிய டிஜிட்டல் லைப்ரரி எவ்வளவு சீக்கிரம் அங்கு கட்டப்படும் என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரும் மன்னார்குடி நகராட்சியில் செயல்படும் கிளை நூலகத்திற்கு நிதிநிலைமைக்கேற்ப வருவாய்த் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள 8,360 சதுர அடியிலோ*

2015 ஆகஸ்ட் 27]

அல்லது சமரச ஞானசபை தானமாக வழங்கியுள்ள 12,284 சதுர அடி நிலத்திலோ நவீன வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரமாக அந்தக் கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்றால், அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உடனடியாக நிதியை ஒதுக்கிக் கொடுத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உடனடியாக அந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கிக் கொடுக்கும்பட்சத்தில் அந்தக் கட்டடப் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியில் மட்டும் நூலகம் கட்டப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் பல இடங்களில் நூலகம் கட்டப்பட வேண்டியுள்ளது என்று அறிகிறேன். அதற்குரிய செயற்குறிப்புகள் எல்லாம் இன்னும் தயாராகவில்லை என்று அறிகிறேன். ** (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, கேள்வி நேரத்தில் அதுமாதிரியெல்லாம் நீங்கள் பேசக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *சரி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ் பெற்ற மன்னார்குடியில் பல ஆண்டுகளுக்கு முன்பாக சமரச ஞானசபை என்ற அறக்கட்டளை திரு. கனகசபை பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்டது. 1931-ல் இந்தியாவிலேயே*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2015 ஆகஸ்ட் 27

முதன்முறையாக அவரால் நடமாடும் நூலகம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதை நூலகத் தந்தை திரு. எஸ்.ஆர். ரெங்கநாதன் அவர்கள்தான் துவக்கி வைத்தார்கள். ஒரு மாட்டு வண்டியில் புத்தகங்களை வைத்து மன்னார்குடி சுற்று வட்டாரப் பகுதிகளுக்குச் சென்று இந்த நூலகம் இயங்கி வந்தது. அந்த வண்டிகூட இப்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இப்போதைய நிலையில், மன்னையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த நூலகம் இப்போது திரு. கனகசபை பிள்ளை அவர்களின் உயில் மூலமாகப் பெறப்பட்ட இடத்தில்தான் இயங்கி வருகிறது. ஆகவே, அந்த நூலகத்துக்கு திரு. கனகசபை பிள்ளை அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று மக்கள் கோரி வருகிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயம் செய்து கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரும் கிளை நூலகம் சம்பந்தமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட, அந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தொடர்ந்து வழிமுறைப்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நவீன வசதியுடன்கூடிய கட்டடங்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவசரமாக இந்தக் கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்றால், அவர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கிக் கொடுத்தால், உடனடியாக அந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்ட வேண்டிய கட்டடங்களை முறைப்படுத்தி, சீனியாரிட்டியின் அடிப்படையில் ஒன்றன்பின் ஒன்றாக நவீன வசதியுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அந்தக் கட்டடத்திற்கு சமரச ஞானசபை என்று பெயர் சூட்ட வேண்டுமென்ற கோரிக்கையையும் உடன் வைத்திருக்கின்றீர்கள். அந்தக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு

2015 ஆகஸ்ட் 27]

எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சூழ்ச்சியாளர்களின் சூழ்ச்சிகளை முறியடித்து, சோதனைகளையும், வேதனைகளையும் கடந்து, சாதனை படைத்து, ஐந்தாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

26-9-2002 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்து தந்தார்கள். அதன் பிறகு, அந்த இடத்திற்குள் பிரவேசிக்க நுழைவு அனுமதியும் வழங்கப்பட்டது. நீதியரசர்களின் வசதிக்காக அணுகுசாலை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது, அதற்கான மொத்தச் செலவினமான ரூ.4,20,000/-ல் (குறுக்கீடு) மூலக் கேள்விக்குத் தொடர்போடுதான் பேசி வருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை நான் முடிவு செய்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நான் முடிவு செய்ய வேண்டும். உட்கார்ந்துகொண்டு நீங்களே பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை நான் முடிவு செய்ய வேண்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிவசங்கர், கையை உயர்த்திப் பேசுவது, உறுப்பினருக்கு உறுப்பினர் பேசுவது எல்லாம் முறையல்ல. நீங்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துதான் பேச வேண்டும். நான் உங்களை எச்சரிக்கிறேன். இதுமாதிரி நடந்துகொள்வது ஒழுங்கீனம். (குறுக்கீடுகள்) நீங்கள் செய்வது சரியல்ல, உட்காருங்கள். திரு. ரா. சரத்குமார், நீங்கள் பேசுங்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை வைத்து ரூ.2,20,000/-ஐ வழங்கினார்கள். பின்னர், அந்த இடத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டும் பணியை அப்போதைய அம்மா அவர்களுடைய அரசு 13-2-2006-ல் நிறைவு செய்தது. 2006 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. நடிகர் சங்கத்தின் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அடுத்த தேர்தலுக்கு முன்பே திராவிட முன்னேற்றக் கழக அரசு, தாங்களே அந்த மணிமண்டபத்தைக் கட்டுவோம் என்று அறிவித்தார்கள்; காலதாமதமும் செய்தார்கள்; மணிமண்டபம் கட்டுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இதை நன்கு உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்... (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிவசங்கர், நீங்கள் மிக அதிகமாகப் பேசுகிறீர்கள். இதுவெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) கைநீட்டிப் பேசுவது தவறு.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் திரு. டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் அவையின் மையப் பகுதிக்கு வந்தனர்.)

முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். கைநீட்டிப் பேசாதீர்கள், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) திரு. சிவசங்கர், நீங்கள் முறையில்லாமல் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சரை வாழ்த்திப் பேசுவதை நீங்கள் ஒன்றும் குறை சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) அதுவெல்லாம் பேச முடியாது, நீங்கள் உட்காருங்கள்.

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறார்கள். இதை நன்கு உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்வதைச் செய்வார்கள்; சொல்லாததையும் செய்வார்கள்; கேட்பதைக் கொடுப்பார்கள்; கேட்காததையும் கொடுப்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நிரூபிக்கும் வகையிலே நேற்றையதினம்... (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவெல்லாம் பேச முடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். இதுமாதிரியெல்லாம் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சரை வாழ்த்திப் பேசுவதை நீங்கள் தவறு என்று சொல்லக்கூடாது. அதற்கு உங்களுக்கு உரிமையில்லை. அதை நான் முடிவு செய்ய வேண்டும். அதையெல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லி நான் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-20

திரு. ரா. சரத்குமார்: இதை நன்கு உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் சொல்வதைச் செய்வார்கள்; கேட்பதையும் கொடுப்பார்கள்; கேட்காததையும் கொடுப்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நிரூபிக்கும் வகையிலே நேற்றையதினம் விதி 110-ன்கீழ் அரசே முன்வந்து நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடித்தவுடன் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) கேள்வி கேட்டவுடன் நான் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். அவர் கேள்விதான் கேட்டுக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவர் கேள்விதான் கேட்டுக்கொண்டிருக்கிறார். நீங்கள் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) அவர் மாண்புமிகு முதலமைச்சரைப் பாராட்டிப் பேசுவதை நீங்கள் எப்படித் தவறு என்று கூற முடியும்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று ஒரு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அதைப் பாராட்டிப் பேசுகிறார். அதைப் பாராட்டிப் பேசுவதை நீங்கள் எப்படித் தவறு என்று சொல்கிறீர்கள்?

திரு. ரா. சரத்குமார்: அவர்களின் தேர்தல் அறிக்கையிலேயே மணிமண்டபம் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் கட்டவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2015 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சரத்குமார் அவர்கள், என்ன துணைக் கேள்வி கேட்க விரும்புகிறாரோ, அந்தக் கேள்வியை மாத்திரம் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

திரு. ரா. சரத்குமார்: *உங்கள் கட்சி உறுப்பினர் திரு. டிஆர்.பி. ராஜா தேவையில்லாமல் கேள்வி கேட்கும்போது, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லவில்லையா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன், உங்கள் கட்சி உறுப்பினர் கேள்வி நேரத்தில் உறுப்பினரோடு நேருக்கு நேர் பேசி தகராறு செய்கிறார். ஒரு உறுப்பினர் மாண்புமிகு முதலமைச்சரைப் பாராட்டுவதை எப்படித் தவறு என்று சொல்ல முடியும்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சரைப் பாராட்டிப் பேசுவதை எப்படித் தவறு என்று சொல்ல முடியும்? ஆகவே, அதையெல்லாம் கேள்வி கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் வந்தது சரி. (குறுக்கீடுகள்) திரு. சரத்குமார், நீங்கள் கேள்வி கேட்டு முடியுங்கள். எல்லோரும் உட்காருங்கள். நான் பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. ரா. சரத்குமார்: *மணிமண்டபம் கட்டி முடிக்க...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சரத்குமார், ஒரு நிமிடம் இருங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் மாண்புமிகு உறுப்பினரை கேள்வி கேட்கச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் மாண்புமிகு உறுப்பினரை துணைக் கேள்வி கேட்கச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். அதில் ஒன்றும் பிரச்சினையில்லை. (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தில் என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.*

2015 ஆகஸ்ட் 27]

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பது மரபு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் குற்றச்சாட்டு சொல்லவில்லை. அவர் பாராட்டித்தான் பேசிக் கொண்டிருந்தார். (குறுக்கீடுகள்) அவர் பாராட்டித்தான் பேசிக்கொண்டிருந்தார், குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிவசங்கர், நீங்கள் குறுக்கிடுவது முறையற்றது, நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.*

திரு. துரைமுருகன்: *திராவிட முன்னேற்றக் கழகம், மணிமண்டபம் கட்டும் என அறிவித்தது எனச் சொல்கிறார். அது முழுக்க முழுக்க தவறான செய்தி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சரத்குமார் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், நாங்கள் மணிமண்டபம் கட்டுகிறோம்; தி.மு.க. சார்பில் கட்டுகிறோம் என்று சொன்னதாக அவர் சொன்னார். அது தவறான செய்தி. ஆகையால், கேள்வி நேரத்தில் முதலில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது, உண்மைக்குப் புறம்பாகவும் சொல்லக்கூடாது. இரண்டையும் திரு. சரத்குமார் செய்திருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் குற்றச்சாட்டு சொல்லவில்லை. திரு. சரத்குமார், குற்றச்சாட்டு இல்லாமல் துணைக் கேள்வி கேளுங்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டு வைக்கவில்லை. தேர்தல் அறிக்கையிலே அவர்கள் கொடுத்ததைப் பற்றிதான் நான் சுட்டிக்காட்டினேன் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 2006 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் மணிமண்டபம் கட்டப்படும் என்று சொன்னதை நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அதைத் தவறு என்றால், அவர்களை சுட்டிக்காட்டச் சொல்லுங்கள்.*

நேற்றையதினம் விதி 110-ன்கீழ் அரசே முன்வந்து நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டித் தருவதாக அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு, தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாகவும்,

திரையுலகம் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மணிமண்டபத்தில் தாங்கள் நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களின் சிறப்பான சிலையையும் அமைத்து, தங்களின் பொற்கரங்களால் திறந்து வைத்து, மணிமண்டபம் அமைக்கும் பணிகளைத் துவங்கிட தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, தென்காசி நகராட்சியில் 1961 ஆம் ஆண்டு முதல் வ.உ.சி. நூலகம் இயங்கி வருகிறது. தென்காசி மேம்பாலப் பணிகள் துவங்கப்பட்டபோது, 90 சதவிகித கட்டடங்கள் இடிக்கப்பட்டு, இடவசதி குறைந்ததால் வ.உ.சி. நூலகம் அருகிலுள்ள மட்டப்பா தெருவில் தனியார் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, மாத வாடகை ரூபாய் 19,000/- செலுத்தி இயங்கி வருகிறது. இந்நூலகத்திற்கு நபார்டு வங்கி உதவியுடன், புதிய கட்டடம் கட்டுவதற்காக அரசுக்குச் சொந்தமான காலி மனையை இலவசமாக நிலப் பரிமாற்றம் செய்து தர மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கோரிக்கைக் கடிதம் ஒன்று மாவட்ட நூலக அலுவலர்மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு நகராட்சியில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதாக அறிகின்றேன். எனவே, இந்த நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசுக்குச் சொந்தமான காலி மனையை நிலப் பரிமாற்றம் செய்து தர ஆவன செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வ.உ.சி. நூலகம் இடம் மாற்றப்பட்டு வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும், நூலகத்திற்குப் புதிய கட்டடம் மற்றும் இடம் தேவை என்றும் இங்கே கோரிக்கையாக வைத்துள்ளார்கள். அதனை ஆய்வு செய்து, அவர் தெரிவித்திருக்கக்கூடிய செய்திகள் ஆய்விலே உண்மையாக இருக்கும்பட்சத்தில், தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வரும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.